**<u>தமிழ்நாடு அரசு</u>**

ந.க.எண் 41 / 2010 | பேரூராட்சி அலுவலகம்,
வாடிப்பட்டி
நாள். 24.05.2010

## <u>அனைத்து பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சி திட்டம் 2010 - 2011</u>

## <u>வாடிப்பட்டி தேர்வுநிலை பேரூராட்சி,</u>

## <u>மதுரை மாவட்டம்</u>

# <u>நாடு தழுவிய ஒப்பந்தப்புள்ளி அழைப்பு</u>

1. வாடிப்பட்டி தேர்வுநிலை பேரூராட்சியில் 2010.11ம் ஆண்டு அனைத்து பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின்கீழ் கீழ்கண்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பணிகளை செய்தவற்கு தகுதி பெற்ற ஒப்பந்ததாரர்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப்புள்ளிகள் பெற விரும்பும் ஒப்பந்ததாரர்கள் பொதுப்பணித்துறையில் அல்லது நெடுஞ்சாலை துறையிலும் பதிவு பெற்ற ( class I or class ll) ஒப்பந்ததாரர்களாக இருக்கவேண்டும் அல்லது குறிப்பிட்ட பணிகளில் அனுபவம் உள்ளவர்களாக இருத்தல் வேண்டும். அதற்கான சான்றிதழ்களை உரிய துறை அதிகாரிகளிடமிருந்து பெற்று சமர்ப்பிக்கவேண்டும்.

2. இப்பேரூராட்சியில் கீழ்க்கண்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பணிகளுக்கு தகுதிவாய்ந்த ஒப்பந்தக்காரர்கள் மூலம் ஒப்பந்தப்புள்ளிகள் இப்பேரூராட்சி செயல் அலுவலராலோ அல்லது செயல் அலுவலரின் அங்கீகாரம் பெற்ற அலுவலராலோ வரவேற்கப்படுகின்றன.

3. பணிகளுக்குரிய ஒப்பந்தப்படிவங்களை 28.05.2010ம் தேதி முதல் 10.06.2010ம் தேதி வரை உள்ள வேலை நாட்களில் அலுவலக வேலை நேரத்தில் பிற்பகல் 5.00மணிக்குள் உரிய தொகையினை இப்பேரூராட்சி அலுவலகத்தில் செலுத்தி அல்லது (Executive Officer, Vadipatti Town Panchayat) என்ற முகவரிக்கு வரைவோலை மூலம் அனுப்பி பெற்றுக் கொள்ளலாம். ஒப்பந்தப் படிவங்களை தபால் மூலமோ அல்லது விரைவு தபால் மூலமோ பெறவிரும்புவோர் உரிய தொகைக்கு மேல் கூடுதலாக ரூ.200/. மேலே சொல்லப்பட்ட வழிமுறைகளின் படி செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். தபால் வழி தாமதங்களுக்கு செயல் அலுவலர் பொறுப்பேற்க இயலாது.

4. ஒவ்வொரு பணிக்கு அதன் எதிரே குறிப்பிட்டுள்ள டேவணித் தொகையை தேசிய மையமாக்கப்பட்ட வங்கி வரைவோலையாக (Executive officer, Vadipatti Town Panchayat) என்ற முகவரிக்கு பெறப்பட்டு செலுத்தப்பட வேண்டும். ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்ட நாளிலிருந்து 45நாட்களுக்கு செல்லத்தக்க வகையில் வங்கி வரைவோலை இருக்க வேண்டும்.

5. ஒப்பந்தப்புள்ளிகள் பேரூராட்சி செயல் அலுவலராலோ அல்லது அவரது அதிகாரம் பெற்றவராலோ 11.06.2010ம் தேதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00மணிவரை பெற்றுக் கொள்ளப்படும். எதிர்பாரத காரணத்தினால் அன்றைய தினம் விடுமுறையாக

அறிவிக்கப்படுமாயின் அதற்கு அடுத்த வேலை நாளில் பிற்பகல் 3.00 மணிவரை பெற்றுக் கொள்ளப்படும். வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் பேரூராட்சி செயல் அலுவலர் அல்லது அவரது அதிகாரம் பெற்ற அலுவலரால் வருகை தந்துள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் அன்றைய தினம் பிற்பகல் 3.30மணிக்கு திறக்கப்படும்.

6. இதர விபரங்களை ஒப்பந்தப்புள்ளிப் படிவத்திலும் அலுவலக வேலை நேரத்திலும் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

| வ. எண் | பேரூராட்சியின் பெயர் | பணியின் பெயர் | உத்தேச மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) | டேவணி தொகை ரூ. | ஒப்பந்தப் படிவத்தின் விலை ரூ. | பணி முடிக்க வேண்டிய காலம். |
|---|---|---|---|---|---|---|
| 1 | வாடிப்பட்டி தேர்வுநிலை பேரூராட்சி | 1) வார்டு எண் 8, ஒந்தாயி அம்மன் கோவில் செல்லும் சாலையினை ஈரடுக்கு மெட்டல் பரத்தி தார்சாலையாக மாற்றுதல் (நீளம்900மீ x அகலம் 3.75) | 13.00 | 13,000 | 6,750 | 60 நாட்கள் |
| 2 | | 2) வார்டு எண் 17, பொன்பெருமாள் கோவில் அருகில் பொதுமக்கள் பயன்படுத்தும் வகையில் அனைத்து வசதிகளையும் கொண்ட சமுதாய கூடம் கட்டுதல் | 20.00 | 20,000 | 6,750 | 120 நாட்கள் |
| 3 | | 3) வார்டு எண் 14, பெருமாள்பட்டியில் சுகாதார வளாகம் கட்டுதல் | 6.00 | 6,000 | 1,680 | 120 நாட்கள் |
| 4 | | 4) வார்டு எண் 14, பெருமாள்பட்டி சேர்வைக்காரர் தெருவில்சிமிண்ட்சாலை மற்றும் வடிகால் அமைத்தல் ( 300மீ x 3.25மீ ) | 6.75 | 6,750 | 1,680 | 90 நாட்கள் |
| 5 | | 5) வார்டு எண் 1, தாதம்பட்டி நீரேத்தான் பகுதியில் சந்தை கட்டுமான பணிகள் செய்தல் | 10.00 | 10,000 | 6,750 | 120 நாட்கள் |
| 6 | | 6) வார்டுஎண் 9,10, 13,14, 15,16 ஆகிய வார்டுகளில் போர்வெல் அமைத்து மினி பவர்பம்பு அமைத்தல் | 8.40 | 8,400 | 1,680 | 120 நாட்கள் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 7 | | 7) வார்டு எண் 6,15ல் மேட்டுநீரேத்தான் மற்றும் சாணாம்பட்டி பகுதியில் சிமிண்ட்சாலை அமைத்தல் ( 550மீ x 3.00மீ ) | 7.25 | 7,250 | 1,680 | 90 நாட்கள் |

**முக்கிய நிபந்தனைகள்**

1. சாலைகள் அமைத்தல் மற்றும் கட்டிடம் கட்டும் பணிகளில் அனுபவம் உள்ள தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்களுக்கு மட்டுமே ஒப்பந்தப்புள்ளி நமுனா வழங்கப்படும். ஒப்பந்ததாரர்கள் பொதுப்பணித்துறையில் அல்லது நெடுஞ்சாலை துறையிலும் பதிவு பெற்ற ( class I or class ll) ஒப்பந்ததாரர்களாக இருக்கவேண்டும் அல்லது குறிப்பிட்ட பணிகளில் அனுபவம் உள்ளவர்களாக இருத்தல் வேண்டும். அதற்கான சான்றிதழ்களை உரிய அலுவலக தலைமை அலுவலரிடமிருந்து பெற்று சமர்ப்பிக்கவேண்டும். அதற்கான ஆதாரங்களை ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளி நமுனா கேட்டு விண்ணப்பிக்கும் போது இணைத்து அனுப்ப வேண்டும். கட்டிடம் கட்டும் பணியில் நல்ல அனுபவம் பெற்றிருக்கவேண்டும்.

2. செல்வ நிலையில் குறிப்பிட்டுள்ள சொத்தின் மீது நீதிமன்றத்தின் வழக்கு ஏதேனுமுள்ளதா? நாளது வரை மேற்படி சொத்து தங்கள் பொறுப்பில் உள்ளதா? என ஒப்புறுதி அளிக்க வேண்டும்.

3. ஒப்பந்தகாரர் குறைந்த பட்சம் 5ஆண்டுகள் அனுபவம் உள்ளவரா? ஆம் எனில் மேற்குறிப்பிட்ட காலத்தில் அவர் வேலை செய்த இடம், வேலையின் விபரம், தொகை குறிப்பிட்ட படிவத்தில் பூர்த்தி செய்து இணைக்கப்பட வேண்டும். அப்பணிகளுக்கு சம்மந்தப்பட்ட துறையின் அலுவலர் ஒப்புதல் கையொப்பம் செய்திருக்க வேண்டும்.

4. ஒப்பந்தக்காரர் ஒப்பந்தப்புள்ளி கோரும் பணியின் மொத்த மதிப்பீட்டில் 2 1/2 மடங்கு பண மதிப்பு (அனைத்து பணிகளும் சேர்த்து) தொடர்ச்சியாக கடந்த 3 ஆண்டுகளிலும் செய்து முடித்திருந்த வேலையின் அனுபவம் வேண்டும். அதற்கான உரிய அதிகாரியின் சான்று இணைக்கப்பட வேண்டும்.

5. ஒப்பந்தக்காரர் ஒப்புந்தப்புள்ளி கோரும் பணியின் மொத்த மதிப்பீல் 1/2மடங்கு அதே போன்ற பணி ஏதேனுமென்று 2008 முதல் 2009ம் ஆண்டிற்குள் செய்து முடித்திருக்க வேண்டும்.

6. ஒப்பந்தகாரர்களுக்கு பணிகள் அவர்கள் 3 ஆண்டுகளில் செய்துள்ள பணியின் அனுபவத்தின் அடிப்படையில் மற்றும் மதிப்பீட்டுத் தொகையின் அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்படும்.

7. நிர்வாகம் மற்றும் வேலை குறித்த மூடி முத்திரையிடப்பட்ட இரு உறை ஒப்பந்தப்புள்ளி முறை பின்பற்றப்படும். இவற்றில் ஒவ்வொரு உறையையும் நிர்வாகம் மற்றும் வேலைகள் குறித்த இரு உறைகள் அடங்கி இருக்க வேண்டும். இவற்றில் நிர்வாகத் தகவல் குறித்த உறை முதலில் திறக்கப்படும். அதில் ஒப்பந்தகாரர் தகுதி பெற்றிருந்தால் மட்டுமே வேலை சம்மந்தமான இரண்டாவது உறை திறக்கப்பட்டு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும். ஒப்பந்ததாரர் தகுதி குறித்த முதல் உறையில் தகுதியின்மை காணப்பட்டால் இரண்டவாது உறையை திறக்காமலே அவருடைய ஒப்பந்தப்புள்ளி நிராகரிக்கப்படும்.

8. ஒப்பந்ததாரருக்கு தகுதி குறித்த வினாப்படிவத்தினை அலுவலக வேலை நேரத்தில் கேட்டுப் பெற்றுக் கொள்ளலாம் அல்லது அலுவலக விளம்பரப் பலகையில் பார்த்து தெரிந்து கொள்ளலாம்.

9. ஒப்பந்தகாரர்கள் தாக்கல் செய்யும் ஒப்பந்தப்புள்ளிகள் பேரூராட்சி மன்றத்தின் மூலம் ஆய்வு செய்யப்பட்டு தகுதியான ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக் கொள்ளப்பட்ட பின்னரே வேலைக்கான ஆணை வழங்கப்படும். கடந்த ஆண்டுகளில் ஒப்படைக்கப்பட்ட பணியினை குறிப்பிட்ட காலத்திற்குள்செய்து முடிக்காமல் அபராதம் விதிக்கப்பட்ட ஒப்பந்ததாரர்களுக்கு செட்டியூல் வழங்கப்படமாட்டாது.

10. பணியினை முடித்து அதற்கான முடிவறிக்கை கிடைக்கப்பெற்ற பின் அவை மேலதிகாரிக்கு அனுப்பி வைக்கப்படும். முடிவறிக்கையை ஆய்வு செய்து நிதிவிடுவிக்கப்பட்ட பின்னரே ஒப்பந்ததாரருக்கு பட்டியல்படி உள்ள தொகை வழங்கப்படும்.

11. 1998ம் ஆண்டு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தச் சட்டம் மற்றும் அரசால் அவ்வப்போது வெளியிடப்பட்ட ஆணைகள் மற்றும் அறிவுரைகள் இப்பணிக்கும் பொருந்தும்.

செயல் அலுவலர்,
வாடிப்பட்டி பேரூராட்சி
மதுரை மாவட்டம்.

**பெறுபவர் :**
வாடிப்பட்டி தேர்வுநிலை பேரூராட்சியில் பதிவு செய்துள்ள ஒப்பந்ததாரர்,
வாடிப்பட்டி.

**நகல் :** வாடிப்பட்டி பேரூராட்சியிலுள்ள அனைத்து அலுவலகங்களின் விளம்பரப் பலகைக்கும்.

**நகல் :**

1. சென்னையிலுள்ள பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.
2. மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.
3. மதுரை மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.
4. செயற் பொறியாளர் சென்னை அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.
5. உதவி செயற் பொறியாளர், விளாங்குடி அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.
6. உதவி பொறியாளர் விளாங்குடி அவர்களின் தகவலுக்கு அனுப்பப்படுகிறது.
7. அனைத்து பேரூராட்சி செயல் அலுவலர்கள், மதுரை மாவட்டம் தகவல் பலகையில் ஒட்டி விளம்பரப்படுத்த அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.
8. தலைவர், துணைத்தலைவர் மற்றும் உறுப்பினர்கள், வாடிப்பட்டி தேர்வுநிலை பேரூராட்சி, தகவலுக்கு.